வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 25.09.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------

## தலைப்புச் செய்திகள்

இந்தியாவில், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையேயான இடைவெளி, கடந்த 12 ஆண்டுகளில் குறைந்துள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலகளாவிய, நிச்சயமற்ற தன்மைகள் நிலவிய போதிலும், இந்தியா 7.8 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எட்டி உள்ளது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தன்னிறைவான எதிர்காலத்திற்கு வலு சேர்ப்பதில் பி.எம் சூரிய கர் முஃப்த் பிஜிலி திட்டம் சிறப்பாக பங்காற்றி வருகிறது.

புதுச்சேரியில், 2015ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 102ஆக இருந்த காசநோய் பாதிப்பு, கடந்த 2025ஆம் ஆண்டில் 98ஆக குறைந்துள்ளது என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

------------------------

## மோடி யாத்ரா 1 (20)

இந்தியாவில், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையேயான இடைவெளி, கடந்த 12 ஆண்டுகளில் குறைந்துள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சேவா சங்கல்ப் அபியான் திட்டத்தின் கீழ், உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் இருந்து, வத் நகருக்கு செல்லும் யாத்ரிகர்களுடன் காணொளி வாயிலாக இன்று கலந்துரையாடிய பிரதமர், அனைவரின் பங்களிப்பு மற்றும்

ஒத்துழைப்போடு, வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவோம் என்று தெரிவித்தார். வத் நகர், மதிப்புமிக்க நன்னெறிகளை வழங்கி, தனது வாழ்க்கையை மாற்றி அமைத்ததாக தெரிவித்தார். காசி மாநகரம், ஆன்மீக பாரம்பரியத்தின் சின்னமாக திகழ்கிறது என்றும் கூறினார். இளைஞர்கள் இந்த சேவைப் பயணத்தில் பங்கேற்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் குறிப்பிட்டார். உள்கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தப்பட்டு இருப்பதன் மூலம், கிராமங்கள், சுயசார்பு மிக்கதாக திகழ்கின்றன என்றார். மேலும், கிராமங்களின் வளர்ச்சியில் மகளிரின் பங்கு முக்கியமானதாக உள்ளது என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா-வின் பிறந்த நாள் இன்று கொண்டாடப் படுவதை நினைவு கூர்ந்த பிரதமர், அவரின் சேவை மனப்பான்மை, பொறுமை, ஒத்துழைப்பு, நேர்மறையான சிந்தனை போன்றவற்றை, நமது வாழ்வின் வழிகாட்டு நெறிமுறைகளாக நாம் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியின் போது, சேவா

## மோடி யாத்ரா 2 (4)

யாத்ரிகர்கள் தங்களது அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர். அப்போது, யாத்திரையின் போது அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களை ஒரு நாட்குறிப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

------------------------

## அமித் ஷா (11)

உலகளாவிய, நிச்சயமற்ற தன்மைகள் நிலவிய போதிலும், இந்தியா 7.8 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எட்டி உள்ளது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வர்த்தக கண்காட்சியை இன்று பிற்பகல் தொடக்கி வைத்து பேசிய அவர், உலகின் அதிவேகமாக வளரும் முக்கிய பொருளாதாரம் என்ற நிலையை இந்தியா தக்க வைத்துக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார். 2047ஆம் ஆண்டிற்குள், விக்சித் பாரத் என்ற உறுதியுடன் நாடு முன்னேறி வருவதாக தெரிவித்த அவர், தற்போது, இந்தியாவின் ஏற்றுமதி

பன்மடங்கு அதிகரித்துள்ளதாகவும், செமிகண்டக்டர் துறையில், விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

------------------------

## சேவா சங்கல்ப் -1 (14)

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்,** இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த சிறப்பு தொடரில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வை அடிப்படையிலான, சூர்ய சக்தி புரட்சி குறித்த ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

## சேவா சங்கல்ப் 2 (15)

(வாய்ஸ்)

இந்தியாவின் சூரிய மின்சார ஆற்றல் வளர்ச்சிக்கு, குஜராத் ஒரு ஆரம்பகால ஆய்வகமாக விளங்கியது. அம்மாநில முதலமைச்சராக திரு. நரேந்திர மோடி ஒரு பிரத்யேக சூரிய ஆற்றல் கொள்கையை அறிமுகப்படுத்தினார். இது, பெரிய அளவிலான சூர்ய மின்சார உற்பத்திக்கு வலுவான அடித்தளங்களை அமைத்ததுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை, பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி வாய்ப்பாக பயன்படுத்த முடியும் என்பதையும் நிரூபித்தது. குஜராத் மாநிலத்தின் இந்த அனுபவம், ஒரு மிகப்பெரிய தேசிய மாற்றத்தின் முக்கிய அம்சமாக அமைந்தது. 2014ல் 2.8 ஜிகாவாட்டாக இருந்த இந்தியாவின் சூர்ய மின்சார உற்பத்தித் திறன், 2026 ஜூலை மாதம் வரையிலான காலகட்டத்தில் 165 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது, இந்தியாவின்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில் சூர்ய மின்சக்தி மிகப் பெரிய அங்கமாக திகழ்வதை எடுத்துக் காட்டுகிறது. 2024-ல், 75 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்கீட்டில் தொடக்கப்பட்ட பி.எம். சூரிய கர் முஃப்த் பிஜிலி திட்டமானது 51 லட்சம் வீடுகளை சென்றடைந்துள்ளது.

## சேவா சங்கல்ப் 3 (6) 70

விவசாயிகள் பி.எம் குசும் திட்டத்துடன் இணைவதன் மூலம் சூர்ய மின்சக்தியால் இயங்கும் நீர்ப் பாசனத்திற்கு மாறுகிறார்கள். இது டீசலை சார்ந்து இருப்பதை குறைந்து, பயிர் சாகுபடிக்கான தொடர் செலவையும் குறைக்கிறது. பி.எம். சூர்ய கர் திட்டத்தின் மூலம் உற்பத்தி, நிதி, மற்றும், பராமரிப்பு உள்ளிட்ட துறைகளில் சுமார் 17 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

-----------------------

## ஜிப்மர் (15)

புதுச்சேரியில், 2015ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 102ஆக இருந்த காசநோய் பாதிப்பு, கடந்த 2025ஆம் ஆண்டில் 98ஆக குறைந்துள்ளது என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார். ஜிப்மரில் இன்று நடைபெற்ற தேசிய காசநோய் மாநாடு மற்றும் கொள்கை கலந்துரையாடலின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தொழில்நுட்பம், அறிவு, மற்றும், சிகிச்சை ஆகியவை தேவைப்படும் ஒவ்வொரு நபரையும், விரைவாகவும், கண்ணியத்துடன் சென்றடைவதை உறுதி செய்வதே தற்போது நம்மிடையே உள்ள சவால் என்று தெரிவித்தார். இதனால்தான், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் காசநோய் இல்லாத இந்தியா என்ற தொலை நோக்குப் பார்வை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது என்று கூறினார். புதுச்சேரி அரசின் தீவிரமான நடவடிக்கைகள் காரணமாக, 2025ஆம் ஆண்டில் 36 கிராமங்கள் காசநோய் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில், இதுவரை காசநோய் இல்லாத 40 கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

-----------------------

## ரங்கசாமி (9)

புதுச்சேரியில், பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டம், மற்றும், பிரதான் மந்திர ஆவாஜ் யோஜனா திட்டத்தின் கீழ், மங்கலம் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த 24 பயனாளிகளுக்கு, 2ஆம் மற்றும் 3ஆம் கட்ட தவணையாக 20 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், குடிசை மாற்று வாரிய முதன்மை செயல் அலுவலர் திரு. ரவிச்சந்திரன், உதவி பொறியாளர் திரு. அனில் குமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-----------------------

## வங்கி சேவை 1 (5)

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நாடு தழுவிய வேலை நிறுத்தம் அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், வாடிக்கையாளர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில், நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமையன்று வங்கிகள் வழக்கம் போல் இயங்கும் என்று இந்தியன் வங்கி புதுச்சேரி மாநில வங்கியாளர் குழுமம் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

## வங்கி சேவை 2 (13)

(வாய்ஸ்)

<u>வங்கி தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்து கூட்டமைப்பு சார்பில், இம்மாதம் 28, 29, மற்றும் 30ஆம் தேதிகளில், நாடு தழுவிய வேலை நிறுத்தம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையில், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதன்ஒருபகுதியாக வரும் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று அனைத்து பொதுத் துறை மற்றும் கிராம வங்கிகளும் இயங்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மேலும், இணைய வங்கி, மற்றும், மொபைல் வங்கி,யுபிஜ, ஏடிஎம், மற்றும், பிற டிஜிட்டல் வங்கி சேவைகளை அதிக அளவில் பயன்படுத்தி, வங்கி சேவைகள்</u>

பாதிக்கப்படுவதால் ஏற்படும் சிரமங்களை பொது மக்கள் தவிர்க்கலாம் என்றும் இந்தியன் வங்கி புதுச்சேரி மாநில வங்கியாளர் குழுமம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

## காரைக்கால் ஓட்டுனர் பயிற்சி (8)

புதுச்சேரி அரசின் போக்குவரத்துத் துறை சார்பில், காரைக்காலில் ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் 3ஆவது சனிக்கிழமைகளில், மகளிருக்கான சிறப்பு ஓட்டுனர் உரிமம் வழங்கும் முகாம்கள் நடத்தப்பட்ட வருகின்றன. அந்த வகையில், நாளைக் காலை 10 மணி முதல், பிற்பகல் 1 மணி வரை, காரைக்கால் போக்குவரத்துத் துறை வளாகத்தில், மகளிருக்கான சிறப்பு முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த முகாமில் பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம் மற்றும் கூடுதல் ஓட்டுனர் உரிமம் தொடர்பான சேவைகளை பெறலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

## ஓஎன்ஜிசி (10)

காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் வழங்கப்படும் மருத்துவ சேவைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், ஓஎன்ஜிசி நிறுவனம் சார்பில், 14.48 லட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இந்த உபகரணங்கள், அவசர சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுகளில் பயன்படுத்தப்பட உள்ளன. இதற்கான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய காரைக்கால் துணை மாவட்ட ஆட்சியர் திருமதி எம். பூஜா, காரைக்காலில், சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும், ஜிப்மரின் விரிவடைந்த சேவைகளால் பொது மக்களின் சுகாதார நிலை மேலும் மேம்படும் என்றும் தெரிவித்தார்.

------------------------

## வானிலை (7)

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர், ராணிப்பேட்டை ஆகிய

மாவட்டங்களில், அடுத்த 2 நாட்களுக்கு, இடி – மின்னல் மற்றும், பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக் கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழகத்தின் ஏனைய இடங்களிலும், புதுச்சேரி, மற்றும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக் கூடும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவில், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையேயான இடைவெளி, கடந்த 12 ஆண்டுகளில் குறைந்துள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலகளாவிய, நிச்சயமற்ற தன்மைகள் நிலவிய போதிலும், இந்தியா 7.8 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எட்டி உள்ளது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தன்னிறைவான எதிர்காலத்திற்கு வலு சேர்ப்பதில் பி.எம் சூரிய கர் முஃப்த் பிஜிலி திட்டம் சிறப்பாக பங்காற்றி வருகிறது.

புதுச்சேரியில், 2015ஆம் ஆண்டில் 1 லட்சம் பேருக்கு 102ஆக இருந்த காசநோய் பாதிப்பு, கடந்த 2025ஆம் ஆண்டில் 98ஆக குறைந்துள்ளது என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.